Association for Democratic Reforms

myneta.info Puducherry Election Watch



# 2021 சட்டமன்ற தேர்தல் வேட்பாளர்களின் விபரங்கள்

ஜனநாயக சீர்திருத்த சங்கமும், தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு என்ற சுமார் 1200 உறுப்பினர்களை கொண்ட தேசிய பிரச்சாரமும், தேர்தல் சீர்திருத்தம், ஜனநாயகம் மேம்பாடு, ஆளுகையில் மேம்பாடு ஆகிய துறைகளில் பணியாற்றி வருகின்றன. இதன் அங்கமான புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம் 2011, 2014, 2016 மற்றும் 2019 தேர்தகளில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தாக்கல் செய்த பிரமாண பத்திரங்களை ஆய்வு செய்து அதன் அறிக்கை வெளியிட்டது.

2021 தேர்தலுக்கான 324 வேட்பாளர்களில், 323 வேட்பாளர்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

தற்போது 2021 தேர்தல் வேட்பாளர்களின் விபரங்களையும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன் முடிவுகள் பின்வருமாறு :

### குற்றப் பின்னணி

வேட்பாளர்களில், ஆய்வு செய்யப்பட்ட 323 பேரில், 54பேர் (17%) மீது கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. 28 பேர் (9%) மீது கொலை, கொலை முயற்சி, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் போன்ற கடுமையான கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இரண்டு வேட்பாளர்கள் மீது கொலை வழக்கும், ஒரு வேட்பாளர் மீது கொலை முயற்சி வழக்கும், ஒரு வேட்பாளர் மீது பெண்ணை மானபங்கப்படும்படி தாக்கிய வழக்கும் நிலுவையில் உள்ளது. இது 2016 தேர்தலில் 30 பேராக இருந்தது.

காங்கிரசின் 14 வேட்பாளர்களில் 4 பேர் மீதும் (29%)
பாஜகவின் 9 வேட்பாளர்களில் 5 பேர் மீதும் (56%)
அதிமுகவின் 5 வேட்பாளர்களில் 3 பேர் மீதும்(60%)
என்.ஆர். காங்கிரசின் 16 வேட்பாளர்களில் 3 பேர் மீதும்(19%)
தி.மு.க 13 வேட்பாளர்களில் 7 பேர் மீதும்(54%)
தே.மு.தி.க 26 வேட்பாளர்களில் 2 பேர் மீதும்(8%)

கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.




காங்கிரசின் 14 வேட்பாளர்களில் 2பேர் மீதும் (14%)
பாஜகவின் 9 வேட்பாளர்களில் 2 பேர் மீதும் (22%)
அதிமுகவின் 5 வேட்பாளர்களில் 2 பேர் மீதும் (40%)
என்.ஆர். காங்கிரசின் 16 வேட்பாளர்களில் ஒருவர் மீதும் (6%)
சுயேட்சை வேட்பாளர்கள் 96 பேரில் 4 பேர் மீதும் (4%)

கடுமையான கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.




### பொருளாதார பின்னணி

**ஆய்வு செய்யப்பட்ட 323 பேரில், 74 பேர் (23%) கோடீஸ்வரர்கள், 2016-ல் 343 வேட்பாளர்களில் 96 பேர் (28%) கோடீஸ்வரர்கள்**

காங்கிரசின் 14 வேட்பாளர்களில் 12 பேர் (86%),கோடீஸ்வரர்கள்,
பாஜகவின் 9 வேட்பாளர்களில் 8 பேர் (89%) கோடீஸ்வரர்கள்,
அதிமுகவின் 5 வேட்பாளர்களில் 4 பேர் (80%) கோடீஸ்வரர்கள்,
என்.ஆர். காங்கிரசின் 16 வேட்பாளர்களில் 13 பேர் (81%) கோடீஸ்வரர்கள்,
திமுகவின் 13 வேட்பாளர்களில் 9 பேர் (69%) கோடீஸ்வரர்கள்,

**புதுச்சேரி வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு 2.14 கோடியாகும், 2016-ல் இது 2.49 கோடியாகும்.**
14 காங்கிரஸ் வேட்பாளர்களின் சராசரி சொத்து 5.82 கோடியாகும்
9 பாஜக வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு 9.89 கோடியாகும்
5 அதிமுக வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு 9.10 கோடியாகும்
16 என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு 10.79 கோடியாகும்
13 திமுக வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு 8.03 கோடியாகும்
26 தேமுதிக வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு 16.49 லட்சம்



**முப்பெரும் பணக்காரர்கள்**

**G.** நேரு (எ) குப்புசாமி (சுயேச்சை) உருளையன்பேட்டை - 43 கோடி
**N.** ரங்கசாமி (என்.ஆர். காங்கிரஸ்) தட்டாஞ்சாவடி மற்றும் ஏனாம் - 38 கோடி
**A.V.** சுப்பிரமணியன் (காங்கிரஸ்) காரைக்கால் வடக்கு - 27 கோடி

**Comparative Analysis of Crorepati Candidates : 2016 Vs 2021**




**சொத்தே இல்லாதவர்**

அபிமன்னன் (சுயேச்சை) ஊசுடு (தனித்தொகுதி) - தனக்கு சொத்து எதுவும் இல்லை என தெரிவித்துள்ளார்.

**குறைவான சொத்து உள்ளவர்கள்**

**P.** அருளானந்தம் (இந்திய ஜனநாயக கட்சி) காரைக்கால் வடக்கு - 500 ரூபாய்
**A.** நெப்போலியன் (இந்திய ஜனநாயக கட்சி) காரைக்கால் தெற்கு - 500 ரூபாய்
**M.** பரந்தாமன் (பகுஜன் சமாஜ் கட்சி) நெட்டப்பாக்கம் (தனி) - 500 ரூபாய்

**அதிகக் கடன் உள்ளோர், 178 வேட்பாளர்கள் (55%) தங்களுக்கு கடன் உள்ளது என தெரிவித்துள்ளனர்.**

**M.O.H.F.** ஷாஜஹான் (காங்கிரஸ்) காமராஜர் நகர் - 20 கோடி
**G.** நேரு (எ) குப்புசாமி (சுயேச்சை) உருளையன்பேட்டை - 14 கோடி
**R.** சிவா (திமுக) வில்லியனூர் - 10 கோடி

**323 வேட்பாளர்களில் 25 பேர் (8%) தங்கள் பான் (PAN) எண்ணை தெரிவிக்கவில்லை.**

**அதிக ஆண்டு வருமானம் உள்ளவர்கள்**

**S.** ராஜசேகரன் (பாஜக) திருநள்ளாா் - 1.90 கோடி
**S.V.** சுகுமாரன் (என்.ஆர். காங்கிரஸ்) வில்லியனூர் - 1.11 கோடி
**G.** நேரு (எ) குப்புசாமி(சுயேச்சை) உருளையன்பேட்டை - 76 லட்சம்

**பிற விபரங்கள்:**

கல்வி : 162 வேட்பாளர்கள் (50%) 5 முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் என்றும், 133 பேர் (41%) பட்டப்படிப்பு மற்றும் அதற்கு மேல் படித்தவர்கள் என்றும், 18 பேர் டிப்ளமோ படித்தவர்கள் என்றும், 6 பேர் தாங்கள் படிக்காதவர்கள் என்றும், 4 பேர் ஓரளவு படிக்கத் தெரியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

**வயது:**

109 வேட்பாளர்கள் (34%) 25 முதல் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் 175 பேர் (54%) 41 முதல் 60 வயதிற்குட்பட்டவர்கள் என்றும், 39 பேர் (12%) 61 முதல் 80 வயதிற்குட்பட்டவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

**பாலினம்:**

36 (11%) பெண் வேட்பாளர்கள் 2021 புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

**கடந்த 2016 புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட 343 வேட்பாளர்களில் 26 பேர் (6%) பெண் வேட்பாளர்கள்.**

----------------------



ADR Association for Democratic Reforms

myneta.info Puducherry Election Watch

## கடுமையான கிரிமினல் வழக்குகளுக்கான அளவுகோல்கள்:

1. அதிகபட்ச தண்டணையாக 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கத்தக்க குற்றங்கள்
2. ஜாமீன் பெற முடியாத குற்றங்கள்
3. இது தேர்தல் சம்பந்தமான குற்றமாக இருந்தால் (எ.கா. IPC 171E அல்லது லஞ்சம்)
4. அரசு கருவூலத்திற்கு இழப்பு தொடர்பான குற்றம்
5. தாக்குதல், கொலை, கடத்தல், கற்பழிப்பு தொடர்பான குற்றங்கள்
6. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (பிரிவு-8) குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள்.
7. ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் புரியப்படும் குற்றங்கள்
8. பெண்களுக்கு எதிரான குற்றங்கள்.

## ஜனநாயக சீர்திருத்த சங்கத்தின் (ADR) பரிந்துரைகள்

1. தற்போதுள்ள குற்றமயமாக்கல் பிரச்சனைக்கு தீர்வுகாண பல்வேறு குழுக்கள், சிவில் சமூகம் மற்றும் குடிமக்கள் வழங்கும் நம்பத்தகுந்த தீர்வை உடனடியாக செயல்படுத்த வேண்டும். குற்றப்பின்னணி உள்ள வேட்பாளர்களை நிறுத்தும் கட்சிகளை உச்சநீதிமன்றம் கண்டிக்க வேண்டும்.
2. கொலை, கற்பழிப்பு, கடத்தல், ஆள் கடத்தல் போன்ற கொடூரமான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட வேட்பாளர்களை நிரந்தர தகுதிநீக்கம் செய்ய வேண்டும்.
3. 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய கடுமையான குற்றச்செயல்களைச் செய்ததாக தேர்தலுக்கு குறைந்தது 6 மாதங்களுக்கு முன்பே வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நபர்களை தகுதி நீக்கம் செய்தல்.
4. கறைபடிந்த வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட வரி விலக்கு ரத்து செய்ய வேண்டும்.
5. அரசியல் கட்சிகளை தகவல் உரிமைச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவது.
6. கறைபடிந்த பின்னணி உள்ள வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் கட்சியின் பதிவை ரத்து செய்வது
7. அரசியல் கட்சிகள் ஆண்டுதோறும் தங்களது செயற்குழு உறுப்பினர்களுக்கு குற்றவியல் தகவல்களை தாக்க செய்ய வேண்டும் மற்றும் இதுபோன்ற தகவல்களை பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.
8. தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் படிவம்-26 தவறான தகவல்களை அளிக்கும் வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்தல்
9. அரசியல்வாதிகள் தொடர்பான வழங்குகளை உரிய கால அவகாசத்தில் முடித்தல்

**SMS MYNETA <PINCODE> or <CONSTITUTENCY> to 09246022211 or 56263**

**மேலும் விபரங்களுக்கு எங்கள் வலைதளங்களைப் பார்வையிடவும்.**

**www.myneta.info, www.adrindia.org**

**பெ. ஜோசப் விக்டர் ராஜ்,**

**ஒருங்கிணைப்பாளர்**

**புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம்**